**தூயஆவி பெருவிழா**

**இரண்டாவது திருவழிபாடு ஆண்டு**

**2024-05-19**

*(இன்றைய வாசகங்கள்:*

*திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம்* 2: 1-11,

*திருப்பாடல்கள்* 104:1,24,29-31,34,

*திருத்தூதர் பவுல் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 5: 16-25,

*யோவான் எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம்* 15: 26-27; 16: 12-15)

*திருப்பலி முன்னுரை*

*இறை ஆவிக்குரியவர்களே, தூய ஆவியாரின் வருகைப் பெருவிழா திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறோம். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து விண்ணகம் செல்லும் முன்பு, தனது சீடர்களை பலப்படுத்தும் துணையாளராக தூய ஆவியாரை அனுப்புவதாக வாக்களித்திருந்தார். இயேசு விண்ணேற்றம் அடைந்த பத்தாம் நாளில் தூய ஆவியாரின் வருகை நிகழ்ந்தது. தேற்றரவாளரான தூய ஆவியாரின் ஆற்றலால் உறுதிப்படுத்தப்பட்ட திருத்தூதர்கள் கிறிஸ்துவின் நற்செதியைத் துணிவுடன் பறைசாற்றி திருச்சபையை நிறுவிய நாளை நாம் இன்று கொண்டாடுகிறோம். மரணத்தை தூய ஆவியின் ஆற்றலைப் பெற்றவர்களாய் கிறிஸ்துவுக்கு சான்று பகரும் வரம் வேண்டி, இத்திருப்பலியில் நாம் உருக்க மாக மன்றாடுவோம்.*

**விசுவாசிகள் மன்றாட்டுகள்:**

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*ஆவியைப் பொழிபவராம் இறைவா,*

*தூய ஆவியாரின் வருகையால் தோன்றி வளர்ந்த திருச்சபை, அதே ஆவியாரால் வழிநடத்தப்பட்டு செழித்தோங்குமாறு, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் ஆவியானவரின் அருள் கொடைகளை வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*அமைதியின் இறைவா!*

*நீர் 'உங்களுக்கு அமைதி உரித்தாகுக' என்றது போல, எங்கள் வாழ்விலும் உமது அமைதி நிரம்பப் பெறவும், நாங்கள் என்றும் அமைதியுடன் வாழவும் வேண்டிய வரமருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*தூய் ஆவியை ஏற்படுத்திய இறைவா!*

*தூய ஆவியின் வல்லமையால் நாங்கள் நிரப்பப்பெற்று பாவ வாழ்க்கையை விட்டு, தூய ஆவியின் வழிநடத்துதலால், நல்பாதையில் வழிநடக்க வேண்டிய அருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*நம்மை உமது சாயலில் படைத்த இறைவா!*

*உடல் ஒன்றே உறுப்புகள் பலவாய் இருப்பது போல தூய ஆவியார் ஒருவரே, திருத்தொண்டுகளும் பலவகையுண்டு ஆனால் ஆண்டவர் ஒருவரே என்று கூறியவரே, எங்கள் வாழ்வில் நாங்கள் உம்மை மட்டுமே பின்பற்ற வேண்டிய அருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*குழந்தைகளை நேசித்த இறைவா!*

*உலகில் வறுமையால் வாடும் குழந்தைகளைக் கண்ணோக்கிப் பாரும். அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்து, உம்மைப் பின்பற்றும் குந்தைகளாக வாழ வேண்டிய அன்பினைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*தோழமையின் நாயகனே இறைவா!*

*எங்கள் வாழ்க்கையில் வெறும் வெளி அடையாளங்களைத் தனித்து ஆடம்பரங்களைக் குறைத்து, ஆன்மீகத் தயாரிப்பில் எங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டிய வரம்தர வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*கருணையின் இறைவா!*

*கிறிஸ்துவத்திற்கு எதிராய் உலகெங்கும் செயல்படும், மக்களைக் கண்ணோக்கும். அவர்கள் மனமாறி தங்கள் வன்முறையிலிருந்து விடுபட்டு மனிதநேயமுடன் வாழ வேண்டிய நல்மனதினைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*ஆயனின் கட்டளையை கடைபிடிப்போரிடம் அன்பு நிறைவடைகிறது என உணர்த்தும் ஆயனே!*

*கடுமையான வார்த்தைகளைப் பேசியதால் மனம் புண்ணாகி அவமானமாக இருக்கிறது. பல்வேறு தொல்லைகள் என்னைப் புண்ணாக்கி வேதனையால் நொந்து போகச் செய்துவிட்டது என மனம் வருந்தும் உள்ளத்தினரை அன்பு நிறைந்த வார்த்தையால் அரவணைக்கவும், உமது திருக்காயங்களுக்குள் பாதுகாப்பாக அவர்கள் வாழவும் அருள் பொழிய, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*